# இலங்கைப் புகலிட நாவல்கள்

கலாநிதி செ.யோகராசா

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழ் நாவல்களில், சமூக நாவல்கள், குடும்ப நாவல்கள், துப்பறியும் நாவல்கள், வரலாற்று நாவல்கள் என்றவாறு பல நாவல் வகைகள் உள்ளமை யாமறிந்ததே. இவ்விதத்தில் சென்ற நூற்றாண்டின் எண்பதுகள் தொடக்கம் இலங்கைத் தமிழ் நாவல் வளர்ச்சிப் போக்கிலே முகிழ்த்த புகலிட நாவல்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டியது தவிர்க்க இயலாததாகின்றது. ஏனெனில் சிறப்பாக இலங்கை நாவல் வளர்ச்சிப்போக்கிலும், பொதுவாக தமிழ் நாவல் வளர்ச்சிப்போக்கிலும் இவை முக்கியம் பெறக்கூடியனவாகவுள்ளது. இத்தகைய புகலிட நாவல்களின் பண்புகளை விரிவாக எடுத்துக் கூறுவதாகவும் இவ்வழி இவை தமிழ் நாவல் வளர்ச்சிப்போக்கிலே பெறுகின்ற முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவதாகவும், இவ்வாய்வு முயற்சி அமைகின்றது.*

### 1 பின்புலம்

இலங்கைத் தமிழரின் புலப்பெயர்வு சென்ற நூற்றாண்டிலே எண்பதுகளுக்கு முன்னர் இரு தடவைகள் (1920–1930, 1950–1960) இடம்பெற்றிருப்பினும் எண்பதுகளளவில் இடம்பெற்ற புலப்பெயர்வு வித்தியாசமானது. இவ்வாறு புலம்பெயர்ந்து சென்றோரில் கணிசமானோர் இலங்கையிலே இடம்பெற்ற அரச இராணுவ பேரினவாத ஒடுக்குமுறை காரணமாக அரசியல் தஞ்சம்கோரி ஐரோப்பிய நாடுகள் (எ.டு: ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே, சுவிஸ், பிரித்தானியா) அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா நாடுகளுக்குச் சென்றனர். இவ்வாறு சென்றோர் ஆங்கில மொழியையோ, ஐரோப்பிய மொழியையோ அறியாதிருந்தனர்; உயர் கல்வி கற்காதவர்களாகவிருந்தனர். புகலிட நாடுகளில் அகதிநிலை வாழ்க்கையை எதிர்கொள்பவர்களாகவும் பண்பாடு, மொழி, நிறம், தொழில், மதம், காலநிலை அனைத்திற்கும் முற்றிலும் புதியவர்களாகவும் காணப்பட்டனர். இவ்வாறான புதிய சூழ்நிலையோடும் குடும்பப் பிரிவும், ஊர் நினைவும் இலங்கையில் நிகழ்ந்து வந்த ஒடுக்குமுறைக் கொடுமைகள் பற்றிய செய்திகளும், தனிமையும், அன்னியமும் இளமை உணர்வுகளும், குடும்பப்பொறுப்பும் எதிர்கால வாழ்க்கை பற்றிய அச்சமும் இவர்களை வாட்டி வதைத்தன. இவ்வாறு புலம் பெயர்ந்தோர்களில் முன்னாள் எழுத்தாளர்களும் எழுத்தார்வம் மிக்கவர்களும் காணப்பட்டனர். இவர்கள் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்தனர். விளைவாக புகலிட இலக்கியங்கள் பிறப்பெடுத்தன. இவற்றின் ஊடாக இவர்கள் தமது அனுபவங்களையும் வெளிப்படுத்தினர்.

நவீன இலக்கியத்தின் வடிவங்களுக்குரிய தனித்துவ இயல்புகள் காரணமாக தவிர்க்க இயலாதவாறு புகலிட இலக்கியங்களுள் கவிதைகளே முதன்மை இடம் பெற்றன. சிறுகதைகள் அதற்கு அடுத்த நிலையில் காணப்பட்டன. நாவல்கள் மிகக் குறைவாகவே எழுந்தன. குறுகிய கால அடைவில், பரந்த அனுபவ வட்டத்தை அவாவி நிற்கும் நாவல்கள் அதிகமெழ முடியாமை இயல்பானதே. ஆயினும், இவ்வாறு எழுந்துள்ள நாவல்களை ஆய்விற்குட்படுத்துவது தவிர்க்க இயலாததே ஆகும்.

### 2. அணுகுமுறை

இத்தகைய புகலிட நாவல்களை ஆய்வு வசதிகருதி

1. இலங்கையில் வாழ்கின்ற தமிழர் பற்றியவை.
2. புகலிட நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்கள் பற்றியவை.

என்று வகைப்படுத்தி அணுகுவது பொருத்தமானது. (இவ்வாறு வகைப்படுத்தினாலும் இவ்வாறான நாவல்கள் பல, ஈரிடங்களையும் களமாகக் கொண்டிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### 3. இலங்கையில் வாழ்கின்ற தமிழர் பற்றியவை.

### 3.1 சீதனப் பிரச்சினை "ஆண்கள் விற்பனைக்கு"

இலங்கைத் தமிழர் மத்தியிலே நீண்ட காலமாக நிலவி வருகின்ற பிரச்சினைகளுள் இப் பிரச்சினை முக்கியமானதொன்று. கவிஞர் பாரதியார்கூட இலங்கையில் நிலவி வரும் இப் பிரச்சினை பற்றி 'இந்தியா' பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் இப்பொருள் பற்றிய நாவல்கள் மிக அரிதாகவே இங்கு வெளிவந்துள்ளன. இவ் விதத்தில் புகலிட நாவலாகிய 'ஆண்கள் விற்பனைக்கு' கவனத்திற்குரிய படைப்பாகின்றது.

இந் நாவல் பற்றி நோக்கும் முன், புகலிட நாட்டில் இருந்து கொண்டு, தாய் நாட்டின் சீதனப் பிரச்சினை பற்றி எழுதுவது தொடர்பாக பார்த்தீபன் குறிப்பிடும் காரணம் இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் கூறுவதாவது :

"சீதனம் என்பது இப்போது பெரிய பிரச்சினை அல்ல என்பது போல பலர் பேசிக்கொள்கின்றார்கள். அது தவறானது என்பதை என்னால் நேரடியாகவே கண்டு கொள்ள முடிந்தது. சகோதரிகளுக்காக 12 மணித்தியாலங்களுக்கும் மேலாக காச் சம்பளத்தில் அடுப்பு வெக்கைக்கு முன்னால் வெந்து கொண்டிருக்கும் சகோதரர்களைச் சந்தித்தபோதும் அட்டகாசமான திருமணக் கொண்டாட்டங்களில் பங்குபற்றும் பலர் தங்களுக்குள் மணமக்களைப் பற்றிக் கதைத்துக் கொள்கின்ற போதும், அரசியல் தஞ்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள், வேலை செய்பவர்கள், குடியேற்ற அந்தஸ்து கிடைத்தவர்கள் தங்களது 'விலை' கூடிவிட்டதாக அறிவிக்கும் போதும், ஊரில் உள்ள ஆதனங்களை விற்று கூடவே குடும்பத்தையும் கடனாளியாக்கிவிட்டு, சீதனப் பொதியுடன் பிராங்போட் விமான நிலையத்தில் வந்து குவியும் தமிழ் பெண்களைப் பார்த்தபோதும் சீதனம் என்பதன் பாதிப்பு தெளிவாகவே புரிந்தது...."

ஆக, புகலிட நாட்டுச் சூழல் நாவலாசிரியரை இப்பொருள் பற்றி எழுதத் தூண்டியுள்ளதென்பது எமது கவனத்திற்குரியது.

'ஆண்கள் விற்பனைக்கு' நாவல், பத்மா, உமா என்ற இரு பெண்களின் கதை. பத்மா அறிவும், அனுபவமும் எதிர்நீச்சல் போடும் இயல்பும் கொண்டவள்; தன்னைப் போன்று கதை இலக்கிய ஈடுபாடுள்ள இளைஞன் ஒருவனை விரும்புபவள். எனினும் அவன் போலியானவன் என்றறிந்த பின் அவனிடமிருந்து ஒதுங்கிவிடுகின்றாள். உமா, முதிரா இளம் பருவத்தினள் 'ரியூட்டரி'யில் கற்கும் ஒருவனைக் காதலித்து, ஊர் சுற்றித் திரிந்தவள். எனினும், இறுதியில் அவனால் கைவிடப் பட்டவள். தற்கொலை செய்ய முயல்கின்ற போது பத்மாவின் உபதேசங்களுக்காட்பட்டு தற்துணிவு பெற்றவள். முடிவில், இருவரும் இம் முடிவிற்கு வருகின்றனர் :

"எப்பவாவது உண்மையான ஆம்பிளை ஆராவது எங்களை சந்திக்கும் மட்டும் இப்படியே

இருப்பம்; சந்திச்சால் கல்யாணத்தைப்பற்றி யோசிப்பம்''. இலங்கையிலிருந்து இப் பொருள்பற்றி அரிதாகவே நாவல்கள் வெளிவந்துள்ளன என்ற விதத்திலும் நாவலின் முற்போக்கான முடிவுகாரணமாகவும் இந்நாவல் இலங்கை நாவல் வளர்ச்சியில் முக்கியம் பெறுகின்றது.

### *3.2 சாதிப்பிரச்சினை: 'வித்தியாசப்படும் வித்தியாசங்கள்'*

இலங்கைத் தமிழர் மத்தியில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைகளுள் அண்மைக் காலம் வரையும் சாதிப்பிரச்சினை முக்கியம் பெற்று வந்துள்ளது. தற்போது, இலங்கையில் இப் பிரச்சினை கணிசமான அளவு குறைந்துள்ளதாயினும் நாட்டுத்தமிழர் மத்தியில் குறைந்து போகவில்லை. இதன் விளைவாக இப் பிரச்சினையை பொருளாகக் கொண்டும் ஒரு நாவல் வெளிவந்துள்ளது. 'வித்தியாசப்படும் வித்தியாசங்கள்' என்ற அந்நாவலின் ஆசிரியரும் பார்த்திபன்.

இப் பொருள் பற்றி ஏலவே பல நாவல்கள் இலங்கையிலிருந்து வந்துள்ளன. இவ்வித நாவல்கள் எழுதிய டானியல், செ.கணேச லிங்கன் ஆகியோர் நன்கறியப்பட்டவர்களே. இவர்களது நாவல்கள் போன்றே இந் நாவலும் மார்க்சிய நோக்கில் – போராட்ட வடிவில் அமைந்துள்ளது. ஆயினும், ஆசிரியரது மார்க்சியப் பார்வை தெளிவற்றமை கவனத்திற்குரியது. எனினும் இளந்தலை முறை எழுத்தாளரொருவர் சாதிப் பிரச்சினை பற்றி எழுதியுள்ளமையும் 'சமகால'ப் பிரச்சினையுடன் (விடுதலை இயக்கப்பின்னணி) அது தொடர்புபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதே.

### *3.3 குழந்தை வளர்ப்பு: 'பாதி உறவு'*

இலங்கைத் தமிழ் நாவலாசிரியரெவரும் இன்று வரைத் தொட்டிராத பிரச்சினை யொன்றினை – குழந்தை வளர்ப்பு முறையினை – தொட்டு வெளியான புகலிட நாவலாக உள்ளது, பார்த்திபன் எழுதிய பாதி உறவு.

''குழந்தைகளுடன் அவர்களின் மனங்களும் படிப்படியாக அனுபவங்களினாலும் படிப்பினாலும் தான் வளர்ச்சியடைகின்றன. திடீரென அவர்கள் பெரியவர்களாகி விடுவதில்லை. குழந்தைப் பருவத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் தான் அதன் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன. குழந்தைகளை பெற்றோர் களுடன் சூழ்நிலைகளும் சேர்ந்தே வளர்க் கின்றன. தமது பிள்ளைகள் தீயவர்களாகவே வளரவேண்டும் என எந்தப் பெற்றோரும் திட்டம் போட்டு வளர்க்காவிடினும் தங்களது கவனக்குறைவால் பிள்ளைகளை அழிவுப் பாதையில் செல்ல அனுமதித்து விடுகின் றார்கள். இதைத் தடுக்க முடியாதா? முடியும் என்பதனை, ரவீந்திரன் நந்தினி குடும்ப வாழ்க்கையூடாக வெளிப்படுத்துகின்றார் நாவலாசிரியர்.

நாவலின் உள்ளடக்கப்புதுமையும், உளவியல் பாங்கும் இலங்கை நாவல் வளர்ச்சியில் இப்படைப்பிற்கு ஓர் இடத்தை வழங்குகின்றன என்பதில் தவறில்லை.

எவ்வாறாயினும் பார்த்திபன் எழுதிய மேற்குறிப்பிட்ட மூன்று நாவல்களிலும் கருத்திற்கு – சமூக சீர்திருத்த நோக்கிற்கு முதன்மை அளித்திருப்பது காரணமாக இந் நாவல்களில் இயல்பான உணர்வுநிலை வெளிப்பாடும் அழகியல் அம்சங்களும் குறைந்தளவே வெளிப்பட்டுள்ளமை மனம் கொள்ளத்தக்கது.

### 3.4 கிராமத்துவாழ்க்கை:தில்லையாற்றங்கரை

புகலிட வாழ்க்கைச் சூழல் இலங்கைத் தமிழ்க் கிராமத்து வாழ்க்கையை ஒட்டிய நாவலின் வரவிற்கும் வழிகோலியுள்ளமை வியப்பிற்குரியது தான். ஆயினும் 'தில்லையாற்றங்கரை' என்ற நாவலின் ஆசிரியை இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் இதுபற்றி இவ்வாறு கூறும்போது வியப்பின் வலிமை குன்றிவிடுகின்றது எனலாம்.[3]

"லண்டன் கனன்பரி வீதிக்கும் இலங்கையில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த சிறு கிராமமான கோளாவிலுக்கும் எத்தனையோ வித்தியாசம். ஒவ்வொரு நாளும் நான் கடந்து போகும் தேம்ஸ் நதிக்கும் ஒரு காலத்தில் சேறு புரள சிரித்து நீச்சலடித்த தில்லையாற்றுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. ஆனால் நீண்டோடும் தேம்ஸ் நதியைப் பார்க்கும் போது நினைவலைகள் தில்லையாற்று மணற்பரப்பில் தவழ்கின்றது. நிலவுக்குத் தாலாட்டி நெஞ்சக்குள் குளிர் தரும் தென்னோலை சரசரப்பை இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்னும் மறக்க முடியாது........ எத மறந்தாலும் பிறந்த மண்ணை மறக்க முடியாது........"

மேலே நாவலாசிரியை கூறும் பிறந்த மண்ணை மறக்க முடியாநிலை இருபத்தைந்து வருடங்களுக்கு முற்பட்ட காலமோ, இருபத்தைந்து மாதங்களுக்கு முற்பட்ட காலமோ எவ்வாறாயினும் அது புகலிட படைப்புக்கள் பலவற்றின் ஆதார சுருதியாகின்றமையே இங்கு கவனத்திற்குரியது. (அது சொந்த மண்ணிலே உலாவும் எம்மால் உணர்ந்து கொள்ள முடியாதது என்றே கூறவேண்டியுள்ளது). அது மட்டுமன்றி புகலிட எழுத்தாளரான விமல், குழந்தைவேல் கூறுவது போன்று, "கடந்த கால நிகழ்வுகள் பற்றி இலங்கையிலுள்ள எழுத்தாளர்கள் எழுதுவதைவிட, புலம்பெயர் எழுத்தாளர்கள் எழுதுவதே சிறப்பானதாக அமையும் என்று எண்ணுகின்றேன். புலம்பெயர் எழுத்தாளர்கள் எழுதும் போது அந்த இலக்கியத்திற்கான வலு கூடவாக அமையும்" என்றும் கருதுகின்றேன்.

நிற்க, மேற்குறிப்பிட்ட தில்லையாற்றங்கரை கோளாவில் கிராமத்தின் 1957 – 1962 காலப்பகுதியைப் பின்னணியாகக் கொண்டது. குழந்தைப்பருவத்தைத் தாண்டி, 'குமரியாகிக்' கொண்டிருக்கும் கௌரி, மரகதம், சாரதா ஆகிய மூன்று பெண்களைப் பற்றிய கதையாகவுள்ளது. அவர்கள் மூன்று தலைமுறைகளின் சட்டதிட்டத்தை எதிர்த்துப் போராடியதைப் பற்றி அல்லது போராடியதாக நினைத்ததைப் பற்றிய கதையாகவுமுள்ளது.

இந் நாவலில் முற்பகுதியில் மண் வாசனை மிகுந்திருப்பினும் பிற்பகுதியில் அது அருகிவிடுகின்றது. பிற்பகுதியில் 'சமகால' அரசியல் வாடை வெளிப்பட்டிருப்பினும் முற்பகுதியில் அது காணப்படவில்லை. இவ் விதத்தில் பலவீனங்களை இந் நாவல் கொண்டிருப்பினும் குறிப்பிட்ட காலகட்ட கிராமம் ஒன்றின் கதையை பலத்தோடும், பலவீனத்தோடும் சித்திரிப்பதாகவும் இவ் விதத்தில் மட்டக்களப்பு பிரதேச கிராமிய நாவல்களுள் முதன்மை பெறுவதாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

### 3.5 பேரினவாத ஒடுக்குமுறையும் அதன் விளைவுகளும்

புகலிட எழுத்தாளர்கள், தமது சமகால இலங்கைப் பிரச்சினைகள் பற்றி, அதாவது அரச, சிங்கள இராணுவ பேரினவாத ஒடுக்கு முறைகள் அவற்றிற்கு எதிரான விடுதலை இயக்கங்களின் போராட்டங்கள், போராட்ட இயக்கங்களின் பரஸ்பர முரண்பாடுகள் என்பன

பற்றி குறிப்பிடத்தக்க சில படைப்புக்களைத் தந்துள்ளனர். இவை பற்றித் தனித்து நோக்குவதற்கு முன்னர், இவற்றுள் பெரும்பாலானவை இலங்கையின் அரசியல் சூழ்நிலை காரணமாக இலங்கையிலிருந்து எழுதப்பட்டிருக்கவோ வெளிவந்திருக்கவோ முடியாதென்பதனை முதலில் மனங்கொள்வது அவசியமாகின்றது.

### 3.5.1 மண்ணும் மல்லிகையும்

ஈழவிடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்தில் அக்கரைப்பற்றுக் கிராமத்திலே வாழ்ந்த 'பெரிய' குடும்பமொன்று, சிங்கள இராணுவ ஒடுக்குமுறை காரணமாக சிதைந்து போன வரலாற்றை, புகலிடநாட்டிலிருந்து தம் ஊருக்கு வருகின்ற ஒருவரது நினைவுகளூடாகப் பதிவு செய்துள்ளது. இத்தகைய நாவல்கள் மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்து மிக அரிதாகவே வெளிவந்துள்ளன என்ற வித்தில் இந்நாவலின் வரவு அவசியமாகின்றது.

### 3.5.2 வெகுண்ட உள்ளங்கள், வேலிகள்

'கடற்புத்திரன்' எழுதிய மேற்கூறிய இரு படைப்புக்களும், ஈழ விடுதலைப் போராட்ட நோக்குடன் இயக்கங்கள் உருவான காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பிரதேசக் கிராமமொன்றிலே வாழ்கின்ற மக்களது வாழ்க்கையிலேற்பட்ட சிறுசிறு மாற்றங்களையும், மக்களுக்கும் இயக்கங்களுக்குமிடையிலான உறவுகளையும் (மேலோட்டமாகப்) பதிவு செய்துள்ளன.

### 3.5.3 ஒரு கோடை விடுமுறை

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதிய இந்நாவலில் இலங்கையிலே இடம்பெறும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட (ஒரு) பகுதி, தன் குடும்பம் தன்சுற்றம் என்று வாழ்ந்தவர்கள் தமது இனத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு எப்படி முகங்கொடுக்கின்றார்கள் என்பதைச் சித்திரிக்கின்றது. சம்பவங்களை விட, பாத்திரங்களும் (எ-டு: சபேசன்) உரையாடல்களும் இவ்விதத்தில் இந்நாவலில் முக்கியம் பெறுகின்றமை இந்நாவலின் சிறப்பம்சங்களாகின்றன.

### 3.5.4 ஒரு பூ

கே.எஸ்.துரை எழுதிய இந்நாவல் யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள பொலிகண்டி என்ற கிராமத்தில் தன் மகனையும் கணவனையும் உலகமாகக் கொண்டு வாழ்ந்த பூமணி என்ற அப்பாவிப் பெண்ணின் குருவிக்கூட்டு வாழ்க்கை சிங்கள இராணுவ வேட்டை என்ற பெரும்புயலிலே சிக்குண்டு சிதைந்து போவதை உருக்கமான சித்திரமாக்கித் தந்துள்ளது. இராணுவம் அநியாயமாகக் கொன்றொழித்த தனது ஒரே ஒரு மகனையும் அக்கவலை காரணமாக மரணித்த கணவனையும் இழந்து சித்தப்பிரமையோடு நடைப்பிணமாகி அலைந்து திரிந்து தனது வாழ்வை முடித்துக் கொண்ட ஒரு பெண்ணின் – தாயின்– கதையாக மட்டும் இந்நாவல் உருவாகவில்லை. அவ்வாறான அனைத்துத் தாய்மாரின் கதையாகவும் இப்படைப்பு மலர்ந்துள்ளதே இதன் வெற்றியாகின்றது. பூமணி ஒரு ஞானிபோல் உறவினர்களுக்கு தென்படுகின்றாள். அவளது ஆன்மீக ஒளியில் விடுதலைப் போராட்டமும் போராளிகளான மாவீரரது தியாகங்களும் மகத்தானவையாகத் திகழ்கின்றன. இவ் விதத்தில் இங்கு பின்வரும் பகுதியை எடுத்தாள்வது பொருத்தமானது.

" ..........................................................

மாதக்கரசு, பிரச்சினையள் முடியிறதும் முடியாததும் அவரவர் கையிலதான்...

நாங்களெல்லாம் பிறக்க முந்தியே எத்தினையோ பிரச்சினையள் முடிஞ்சுது. ஆனால் ஒப்பாரியள் மட்டும் முடியாமலே இருக்கெண்டு ஒரு கூடலைக்குருவி பாடிக்கொண்டு போச்சு, அதொரு கிழட்டுக் குருவி..........!

.........

'அக்கா சொல்லுறனேயெண்டு குறை விளங்க வேண்டாம்' உங்களுக்குச் சித்தப் பிரமையெண்டு ஊர்முழுக்கக் கதைக்குது. என்ரை பிள்ளையளெண்டால் பைத்தியமெண்டு துகள். உங்கடை கதை காரியங்களைப் பார்த்தால் நீங்க பைத்தியமோ நாங்கள் பைத்தியங்களோ எண்டு மனசிலை ஒரே குமிறிழுப்பாய்க்கிடக்கு. நான் தான் பைத்தியம்.

இல்லையக்கா இந்தப் பிரச்சினைகள் தான் உங்களை இந்த நிலைமைக்கு ஆளாக்கிப் போட்டுது. இல்லாட்டி இப்படியே இருந்திருக்கப் போறியள்? என்ன செல்வாக்கா இருந்த குடும்பம்.

மாதக்கரசு, இந்த விடுதலைப்போரைப் பிரச்சினையெண்டு பேசுறதே ஓர் அறியாமை தான். இதைப் பிரச்சினையாகப் பார்க்கிறதை நிப்பாட்டிப் போட்டு எண்டைக்கு உன்ரை கடமையாகப் பாக்கிறியோ அந்தக் கணமே உன்னளவிலை தமிழீழப் போரும் வாழ்க்கையா மாறிடும். இதைக் கொஞ்சம் ஆழமாய் யோசிச்சால் பிறகு உனக்கு கவலையே வராது.

"எனக்கு வயதேறிப் போச்சு... பிறந்தண்டு பிடிச்ச கஸ்டம்..... இண்டுவரை துலைஞ்ச பாடில்லை.... பிரச்சினையளாலை கலைபட்டு மான்கூட்டங்கள் போலை ஓடிக்கொண்டிருக்கிறம்... என்னாலை உங்களைப் போலை யோசிக்க முடியேல்லை..... பூமணி அவளுடைய மருண்டுபோன கண்களையே பார்த்துக் கொண்டிருந்தாள், பிறகு பேசத் தொடங்கினாள்.

'மான்கள் ஓடுறபடியால் தான் மற்ற மிருகங்களெல்லாம் மான்களை வேட்டைப் பொருளாகவும் தங்களை வேட்டைக்காரராகவும் நினைச்சிட்டுதுகள் நீயும் ஓடுறதும் ஒப்பாரி வைக்கிறதுமாய்த் திரிஞ்சா பிறகு அதுதான் உன்ரை வாழ்க்கையாவும் போயிடும். ஓடாமல் நில். பிரச்சினையளை நேருக்கு நேர் சந்தி என்றாள்.

அதைக் கேட்டபின் மாதக்கரசு கடுமையாக யோசித்தாள். இந்தக் கிராமத்துக் கிழவி இதையெல்லாம் எப்படித் தெரிந்து கொண்டாள்...

"இப்ப நீயும் பைத்தியக்காரிதான். இந்தக் காட்டைவிட்டு வேறைகாட்டுக்கு ஓடினால் போல பிரச்சினையள் முடிஞ்சு போயிடுமே?

ஓடுற மான்களைத் துரத்துறதுக்கு எல்லாக் காடுகளிலையும் மிருகங்களிருக்கு ஓடுற சனந்தான் பிரச்சினை எப்ப முடியுமெண்டு பேப்பருகளிலை தேடும். இப்பவே நில், இப்பவே பிரச்சினையள் முடியும் என்று பூமணி கூறிவிட்டு வெளியேறினாள்......;"

மேற்கூறப்பட்டுள்ள பகுதி பூமணியை ஒரு ஞானியாக இனங்காட்டுகின்றதென்றால், பின்வரும் பகுதி, பூமணியை ஊருக்குரிய தாயாக வெளிப்படுத்துகிறது.[6]

"வெளியே போனவள் மறுபடியும் திரும்பி வந்தாள். மூலஸ்தானத்திற்குள் பிரவேசித்து, விநாயகர் கையிலிருந்த அந்த ஒற்றைச் செவ்வரத்தம் பூவைக் கையில் எடுத்துக் கொண்டு வடக்கு வீதியைத் தாண்டி நடந்தாள்.

அவள் வழமையாக வந்தமர்ந்திருக்கும் மாவீரர் சமாதிக்குக் கீழே யாரோ விளக்கேற்றி வைத்திருப்பது தெரிந்தது.

நேற்று நடந்த போரினால் அந்தச் சமாதியின் படிக்கட்டுக்கள் யாவும் உடைந்து ஒழுங்கின்றிக் கிடந்தன. அழகிய செவ்விளநீர் வடிவமான அந்தச் சமாதி மட்டும் அப்படியே ஒளிகுன்றாது நின்றது.

தன்னுடைய மகனே வாழ்க்கையாக, உலகமாக பிரபஞ்சமாக நினைத்து வாழ்ந்த பூமணி, அந்தச் செவ்வரத்தம் பூவுடன் அங்கேயே மௌனித்து நின்றாள்.

குங்குமம் இழந்து காடுடைய சுடலைப் பொடிகளேந்திய இந்திரா போன்ற அபலப் பெண்கள் துணையில்லாத பூங்கொடிகளாக பிரபஞ்சப் பெருங்காற்றில் அங்குமிங்குமாக ஆறலைபடுவது தெரிந்தது.

ஈஸ்வரன் போன்று வாழத்துடித்து, அவச் சாவில் போன ஜீவன்களின் "ஐயோ....!" என்ற ஆதங்கம் பேரலையாக எழுந்து பாறைச் சுவரில் மோதிப் பிளப்பது போல ஒரு பெரும் பிரளயச் சத்தம் செவிப் பறைகளை வெடிபடச்செய்தது.

..................

அனுபவப் பார்வை மனதில் மண்டிக் கிடக்க இருட் பாலைவனத்தை கிழித்துக் கொண்டே வேகமாக ஓடிவந்து ஓரிடத்தில் நின்றது. அறிவுக் கண்களால் தாண்ட முடியாத அந்த இறுதிக் கதவைத் திறக்க முடியாது மனத்தின் ஓளி தடைப்பட்டு நின்றது. மறுபடியும் மறுபடியும் மனதைச் சுடர்ந்த வைராமாக்கி, அந்த இருட் கதவின் மீது ஓங்கி உதைத்தாள். தடாலென்ற பேரொலி எழுந்தது. அந்த ஒரு நொடியில் மரண பயத்தை மனம் வெற்றிவாகை சூடியது. இம்மைக்கும் மறுமைக்கும் உண்மைக்கும் பொய்மைக்கும் பேதமில்லாத நிலையில் அவள் நின்றாள். அப்பொழுதுதான் அந்த மாவீரர் சமாதியின் முன் அவள் கையிலிருந்த செவ்வரத்தம் பூ தானாக விழுந்தது. அந்தச் சமாதியின் ஒவ்வொரு கற்களிலும் தியாகிகள் ஸ்படிகமாகத் தெரிந்தனர். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அஞ்சியோடிய இனம் தமது ஓட்டத்தை நிறுத்தி, வேட்டைக்காரரைத் துணிந்து வழிமறித்த வீரச்சுடர்ப்பு அந்தக் கட்டிமெங்கும் பொன்மயமாகப் பேரொளியெறிந்தது. எடுத்து விபரிக்க முடியாத பெருமை கொண்ட அந்தத் தியாகத் துறவிகளின் முன் பூமணி தலைசாய்த்து நின்றாள். சொற்ப நேரந்தான் வந்த பாதை வழியே மறுபடியும் வேகமாகத் திரும்பினாள்....."

தவிர, வடமராட்சி பிரதேச மண்வாசனை யை வெளிப்படுத்தும் நாவலாகவும் கவித்துவ நடையோடு எழுதப்பட்ட நாவலாகவும் இது விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

### *3.4.5. சுயம்வரம்*

கே.எஸ்.துரை எழுதியுள்ள இந்நாவலின் ஒரு பகுதி யாழ்ப்பாணத்திலுள்ள கடலோரக் கிராமமொன்றிலே நிகழ்கின்றது. சிங்கள நேவிக் கப்பலின் செல்வீச்சினால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களும் ஒரு வயோதிபரும் கடற்புலிகளும் இணைந்து தங்களுக்கு கொடு மைகள் விளைவித்த நேவிக்கப்பலை வெடி வைத்துத் தகர்ப்பதே இங்கு நிகழ்கின்றது.

இந்நாவலின் தனித்துவம் பற்றி நூலிற்கு முன்னுரை எழுதிய முல்லையூரான் பின்வருமாறு குறிப்பிடுவது கவனத்திற்குரியது: "........ ஈழத்தில் வெளிவந்த தேசிய இனப்பிரச்சினையை கையாண்ட நாவல்களி லிருந்து கே.எஸ்.துரையின் இந்த சுயம்வரம்

என்கின்ற நாவல் சற்று வித்தியாசப்பட்டிருப் பதனை குறிப்பிட்டே ஆகவேண்டும். அதாவது அரசியற் சித்தாந்தங்களுக்குள் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு யதார்த்த நிலையில் நின்றும் விலகி வெறும் சித்தாந்தக் கலவையாக பல நாவல்கள் மக்களைச் சென்றடைய முடியாமற் போன ஒரு துர்ப்பாக்கிய நிலையினின்றும் விலகி நின்று, இந்த நாவல் வடமராட்சியின் மண்வாசனையுடன் வெளிவருகின்றது. எழுத்தாளரின் அனுபவங்கள் இங்கே விரவிக் கிடப்பதை வாசகர்கள் காணலாம். புத்தகமெங்கும் மீன் மணக்கின்றது. கடலும் கடல் சார்ந்தும் வாழ்பவர்களின் வாழ்க்கையும் அவர்களின் போராட்ட உணர்வினையும் ஆசிரியர் சித்திரிக்கின்றார். இங்கே இரண்டு அதிமுக்கிய விடயங்களுக்கு ஆசிரியர் முனைப்புக் கொடுக்க முன்வருகின்றார். ஒன்று, தாயகத்தின் மக்கள் போராட்ட உணர்வுகளை முனைப்புப் படுத்தல். இரண்டு, தாயகத்தினை விட்டு இடம்பெயர்ந்த ஈழத்தவர்களின்பால் தமிழ்த் தேசிய உணர்வினை வளர்த்தல் என்பனவாகும். மண்வாசனை, அத்துடன் தமிழ்தேசிய எழுச்சி ஆகிய இரண்டு வேறுபட்ட உணர்வு, அழகு ஆகிய இரண்டு புள்ளிகளை இணைக்க முயன்று வெற்றிபெறுவது ஓர் அசாதாரண விடயமாகும்.

"சுயம்வரம் நாவலில் மேற்கூறியவற்றோடு இரத்தமும் சதையும் கொண்ட மாந்தர்களும் வந்துபோகின்றார்கள். வீச்சுக்கார சிவலிங்கம், மயிலர் ஆச்சிமுத்துக்கிழவி, வள்ளிக்கொடி, செங்கமலம், ஜீவா முதலான பாத்திரங்கள் அத்தகைய பண்புகள் கொண்டவை.

சுயம்வரம் நாவலின் சிறப்புக்களுக்கு எடுத்துக்காட்டாக இவ்விடத்தில் ஒரு சம்பவத்தை மட்டும் குறிப்பிடுகின்றேன்: நேவிக் கப்பலைத் தாக்குவதற்குரிய வியூகத்திற்கான திட்டம் கிழவர் மயிலரிடம் கருக்கொண்டது கடற்கரைச் சூழலிலே நிகழ்கின்ற இயற்கைச் சம்பவமொன்றின் ஊடாகவே. அது இதுதான்:[6]

"தூரத்தே பருந்தொன்றை மூன்று காகங்கள் விரட்டி விரட்டி கொத்திக் கொண்டிருந்தன. அவைகளின் தாக்குதலுக்குப் பயந்து, பணிந்து, வெலவெலத்த நோரணையில் அந்தப்பருந்து உயரக் கடல்நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

பருந்தின் அச்சத்தாலும் தோல்வியாலும் உற்சாகம் பெற்ற காகங்கள் அதை மேலும் மேலும் உற்சாகமாகத் துரத்திக்கொண்டே சென்றன. இடையில் ஒரு காகம் களைப்படைந்து ஆளைவிட்டால் போதுமென்ற நிலையில் கரைப்பக்கமாகப் பறந்து வாபஸ் வாங்கிக் கொண்டது. ஆனால் மற்றைய இரண்டு காகங்களும் பருந்தை இடைவிடாது துரத்திக் கொண்டே அதனுடன் பறந்து நெடுந்தூரம் சென்று மறைந்தன.

மயிலர் சிறுபிள்ளையாக இருந்த காலத்திலிருந்தே காகங்களின் இந்த அறியாமையைப் பார்த்துக்கொண்டே வருகிறார். நடுக்கடல் வரை பயந்த பாவனையுடன் பறந்து செல்லும் பருந்து காகங்கள் களைப்படைந்ததும் திடீரெனத் தனது மூர்க்கத்தனமான தாக்குதலை மிக வேகமாக ஆரம்பிக்கும். களைப்படைந்திருக்கும் காகங்கள் அதன் பிறகுதான் கரையைத் திரும்பிப் பார்க்கும். அவற்றிற்கு நான்கு புறமும் கடலே தெரியும். களைப்பினால் பதகளித்துப் போகும் காகங்கள் கொடிய பருந்தினால் கொத்தப்பட்டு, கடலில்வீழ்ந்து, பரிதாபமாகத் தமது வாழ்வை முடித்துக்கொள்ளும்.

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாரோ தெரியாது காகங்களுடன் பறந்து, தூரத்தே மறைந்த பருந்து மறுபடியும் வெற்றிகரமாகத் திரும்பி வந்துகொண்டிருந்தது. அத்துடன் சென்ற காகங்கள் இரண்டும் வழமை போலவே இன்று திரும்பவேயில்லை.

ஆண்டாண்டு காலமாகக் கடற்கரைப் பக்கங்களில் நடந்து வரும் இந்தச் சம்பவம் இத்தனையாண்டு காலமாக மயிலரின் மனதில் சாதாரணமான நிகழ்ச்சியாகவே இருந்து வந்தது. ஆனால் இன்று மட்டும் அவருக்கு அதில் ஓர் புது அர்த்தம் தெரிந்தது.

அமைதியாக எழுந்து வேம்படிப் பக்கமாக நடக்கத் தொடங்கினார். அவர் மூளையில் ஏதோ ஒரு பொறி தட்டியிருந்தது........ இயற்கையின் அழகைக் கெடுக்கும் அந்த நேவிக்கப்பலை மயிலரின் ஆசைப்படி வெடி குண்டு நிரப்பப்பட்ட படகொன்று மோதி அழிக்க வேண்டுமானால் கருடன் அழைத்துச் செல்லும் காகங்களைப் போல அந்தக் கப்பலையும் தந்திரமாகக் கரைக்கு அழைத்து வரவேண்டும்......".

### 3.4.6 ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து

விடுதலைப் போராட்டம் நடைபெறும் நாடுகளிலே ஒன்றிற்கு மேற்பட்ட இயக்கங்கள் உருவாவதும் கால ஓட்டத்தில் ஒன்று மேலாதிக்கம் பெற, ஏனைய இயக்கங்கள் செல்வாக்கிழப்பதும் கண்கூடு. இலங்கைத் தமிழ் ஈழப்போராட்டச் சூழலிலும் இஃது நிகழ்ந்துள்ளது. இங்கு மேலாதிக்கம் பெற்ற இயக்கத்திற்கும் மாற்று இயக்கத்திற்கும் இடையே முரண்பாடுகள், தேடுதல்கள், எதிர்வினைகள் நிகழ்ந்து வந்துள்ளன. இந்நிலையில் மாற்று இயக்கம் சார்ந்தோர் தமது அனுபவங்களை எழுத்தில் வடித்து வந்துள்ளனர். இவ்விதத்தில் இரு படைப்புக்கள் எமது கவனத்திற்குரியன. இவற்றிலொன்று, செழியன் எழுதிய "ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து".

மேற்குறிப்பிட்ட நாவல் எழுந்த சூழல் பற்றி நாவலாசிரியர் கூறுவன எமது சிந்தனைக்குரியனவாம். அவர் கூறுகிறார் : [9]

"இவன் எந்த நேரமும் கைது செய்யப்படலாம். உயிருக்கு ஆபத்தான நிலைமை. இவனைத் தேடி தெருத்தெருவாக 'அவர்கள்' அலைகின்றனர். தலைமறைவான ஒரு வாழ்க்கை. இந்நிலையிலும் இவன் தினமும் எங்கள் மண்ணில் தனக்கு நிகழ்ந்தவற்றை அன்றாடம் குறிப்புகளாய் எழுதி வெளிநாடு ஒன்றிற்கு இரகசியமாகக் கடத்துகின்றான். இவ்வாறு எழுதிக் கடத்தப்பட்ட குறிப்புகளி லிருந்தே இத்தொடர் எழுதப்படுகின்றது".

இயக்கமொன்றின் தேடுதல் வேட்டைச் சூழலில் தமது ஊரிலிருந்து தப்பி, கொழும்பை அடைந்து, விமானத்தில் ஏறுவது வரையான (13 மார்கழி 1986 தொடக்கம் 29 தை 1987 வரை) அனுபவங்கள் இப்படைப்பில் பதியப்பட்டுள்ளன; துயரமும் ஏக்கமும் நம்பிக்கையும் விரவ, நாட்குறிப்பு இவ்வாறு முடிவுறுகின்றது :

"இனியதேசமே, மறுபடியும் நான் வருவேன். மனிதன் எனும் இனம் எழுந்துவரும் நாளில் மறுபடி நான் வருவேன். ஒருவேளை என் முற்றாத கனவுகளோடு முதிர்ந்த வயதில் ஏதோ ஒரு நாட்டில் ஒரு அகதியாய் அநாதைப் பிணமாய் பனிக் கட்டிகளுக்கு நடுவிலோ இயந்திரங்களுக்கு அடியிலோ மரணித்துப் போகலாம். காற்றே, மரம், செடி கொடிகளே, என் தலைமுறை மறுபடி இங்குதான் வேர்விட்டு, இரு தளிர்க்கரம் நீட்டி வளரும் என் புதல்வர்கள் அல்லாது போனால் என் பேரர்களில் ஒருவர் வருவார்கள். இத்

தாய்த்திருநாட்டை முத்தமிட வருவார்கள். இனிய தேசமே, தெரிந்தோ தெரியாமலோ நான் ஏதும் தவறு செய்திருந்தால் என் தலைமுறையாவது இங்கு வாழவிடு. விமானம் மேகக் கூட்டத்தினுள் புகுந்து மறைந்து போனது.

### 3.4.7 கொரில்லா

ஷோபா சக்தி எழுதிய கொரில்லா, இலங்கையிலிருந்து தப்பி பிரான்ஸ் சென்ற கெக்கிராஜ் என்பவர் அரசியல் தஞ்சம் கோரி, விண்ணப்பம் செய்யும் வழி தனக்கு இலங்கையில் இலங்கை– இந்திய இராணுவத்தினராலும் தமிழ்ப்போராளிக் குழுக்களாலும் ஏற்பட்ட கொடுமைகளை விபரிக்கும் பாணியில் எழுதப்பட்டுள்ளது. எழுதப்பட்ட முறைமையும் உண்மைச் சம்பவங்கள் அடிக்குறிப்புகளாக இடம்பெறுவதும் இப்படைப்பினை உண்மைத் தன்மை மிக்கதாகப் பரிணமிக்கச் செய்துள்ளன. இத்தியாதி தன்மைகளால் இப்படைப்பு தன்மைய ஓட்டத்துடன் வாசகரை உணர்வு பூர்வமாக நெருங்க வைக்கிறது.

"பூமிப் பரப்பின் எந்த ஒரு புள்ளியிலும் நிலைகொள்ள முடியாமல் பரிதவித்து அலைய நேர்கின்ற மனங்கள் பற்றிய நேர்மையான பதிவு" என்றும் "ஒரு குடும்பத்தின் கதையைக் கலைத்துப் போடுவதன் மூலம் தீர்வு முழுவதும் நடத்தும் கதையாகி விடுகிறது'' என்றும் "சீரியஸான படைப்பு என்றாலே மிடுக்கான வாக்கியங்களும் கரடுமுரடான சொற்பிர யோகங்களும் கொண்டது என்ற மறைமுகக் கருதுகோள் உருவாகியிருக்கும் இக் கால கட்டத்தில் சரளமான, இயல்பான நடையில் எழுதப்பட்டுள்ளது". என்றும், "தமிழ் சுவை என்ற அம்சம் இந்த நாவல் முழுவதும் காணக்கிடைகின்றது''. என்றும் "பல்வேறு கோணங்களில் தமிழ்நாட்டு விமர்சகர்கள், வாசகர்கள் மத்தியிலே கொரில்லா பாராட்டுக்குள்ளாகியுள்ளமை இவ்விடத்தில் விதந்துரைக்கப்பட வேண்டியதாகின்றது".

## 4. புகலிட நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்கள் பற்றியவை

### 4.1 அகதி நிலை வாழ்வு

#### 4.1.1 வானம் வசப்படும்

புகலிட நாடுகளிலே குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்களுள் கணிசமானோர் நிரந்தரமான அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்து அது கிடைக்கின்ற வரையிலே அகதி நிலை அந்தஸ்தில் அகதி முகாம்களிலே வாழ்க்கை நடத்தி வருகின்றனர். அத்தகைய வாழ்க்கையின் சொல்லொண்ணா அவலங்களை விபரிக்கின்ற புகலிட நாவல்களுள் பொ.கருணாகரமூர்த்தி எழுதிய 'வானம் வசப்படும்' குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

மேற்கு ஜேர்மனியில் அகதிமுகாமாக வுள்ள புராதனமான டியூலிப்ஸ் ஹோட்டலி லுள்ள மூன்றாம் தளத்தில் வதிகின்ற இலங்கை அகதிகளான முத்துராசா, அத்வைகன், திலகன், நகுலன், கருவில் ஆகியோரது அன்றாட வாழ்க்கையை சித்திரிப்பதனூடாக, தமிழ் அகதிகள் அனைவரதும் புகலிட வாழ்க்கையின் குறுகிய வெட்டுமுகமாக இந்நாவல் அமைகின்றது என்பதில் தவறில்லை.

இவர்களோடு வாழ்கின்ற ஏனைய நாட்டு அகதிகளுக்கும் இவர்களுக்குமிடையான தொடர்புகளும் ஆங்காங்கே எடுத்துக்காட்டப் படுகின்றது. இவ்விதத்தில் இந்நாவல் மூன்றாம் உலக நாட்டு அகதிகளின் அவலமான வாழ்வை ஓரளவு வெளிப்படுத்த முயல்கிறது என்றுகூடக் கூறலாம்.

இவர்களோடு எவ்வாறோ தொடர்புபட்டு விடுகின்ற மேலைத்தேயப் பெண்களது வாழ்க்கை முறையில் ஏற்பட்டுவரும் அதிர்ச்சியூட்டும் மாற்றங்களையும் (எ–டு : சிறுசிறு கைச்செலவுகளுக்காக, அவ்வப் போது சோரம் போதல், இந்தியர்களிடம் பிள்ளைகளைப் பெற்று விலைபேசி விற்று வருமானம் தேடுதல்) இந்நாவல் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### *4.1.2 ஒரு அகதி உருவாகும் நேரம்*

பொ.கருணாகரமூர்த்தியின் இந்நாவல், அகதிநிலை வாழ்க்கை பற்றியதன்று; மாறாக இலங்கைத் தமிழரொருவர் அகதியாக ஒரு நாட்டில் நுழைவது தொடக்கம் தஞ்சம்தரத் தயாராகவுள்ள நாடுகளிலே சேர்வது வரையில் எதிர்கொள்ள நேர்கின்ற சிக்கல்கள் – ஆபத்துக்கள் – பிரச்சினைகள் பற்றி அகன்ற தளத்தில் நின்று ஆழமாக – அங்கத உணர்வுடன் அலசுகின்றது.

### *4.2.பெண்கள் வாழ்வு*

#### *4.2.1 மாற்றம்*

மேற்குறிப்பிட்ட எழுத்தாளரே எழுதியுள்ள இப்படைப்பு, பெண்நிலைவாதச் சிந்தனைக்குட் பட்டிருந்த பெண்ணொருத்தி தனக்கென ஒரு துணையைத் தேடவேண்டிய கட்டாயம் வரும்போது தடுமாறிப் போவதையும் புகலிட நாட்டில் குடும்ப வாழ்வில் ஈடுபட்ட பின் முற்றாக பாரம்பரியப் பெண்ணாக மாறிவருவதையும் தத்ரூபமான முறையில் வெளிப்படுத்துகின்றது.

மேற்குறிப்பிட்ட மூன்று படைப்புக்கள் பற்றியும் தமிழ்நாட்டு எழுத்தாளரும் விமர்சகருமான ஜெயமோகன் கூறும் விடயங்களுள் மூன்று கவனத்திற்குரியவை. அவர் கூறுவதாவது [12]

"......... இந்தத் தொகுப்பிலுள்ள கதைகள் இலங்கைப் படைப்புகளுக்கு மிக அபூர்வமான கூரிய அவதானிப்பின் மூலம் உருவாகும் சிக்கல் தன்மையும், சமநிலையும் உணர்ச்சி நிலையுடன் இணைந்து வெளிப்படுகின்றன. சமீப காலத்திய ஆகச் சிறந்த சில தமிழ் நூல்களில் ஒன்றாக இதை நான் கருதுகிறேன்.

"கருணாகர மூர்த்தியின் கதைகளில் இச்சிரிப்புத்தான் (நாட்டார் கதை யொன்றிலே, யானை தலையை இடறவருகையில் அதற்குரியவன், சூழவுள்ள ஏனைய விடயங்களைவிட, கூட்டத்தில் நிற்கும் ஒரு பெண்ணைப் பார்க்கும் போது தனக்கு ஏற்பட்ட ஆண்மை எழுச்சியை எண்ணிச் சிரித்தமை; க –ர்) உள்ளது. அநேகமாக எல்லா பக்கங்களிலும், மிகச் சுவாரஸியமான வாசிப்பனுபவத்தை தருவதாக இருப்பது அதுவே, இலங்கையின் குக்கிராமத்திலிருந்து மொழிதெரியாத அன்னிய தேசத்திற்கு வந்து, விமான நிலையம் என்ற ஏமாற்றுச் சுழல் பாதையைத் தாண்ட முடியாமல் சுற்றிச் சுற்றி வரும் சட்டநாதனின் கதை (ஒரு அகதி உருவாகும் நேரம்) முதல் வாசிப்பில் புன்னகையை உருவாக்கத் தக்கதுதான். ஆனால் அதில் பெரிய சோகம் உள்ளுறைந் துள்ளது. அந்த ஏமாற்றுச் சுழல் பாதை உண்மையில் விமான நிலையமே அல்ல. புலம் பெயர்ந்த தமிழனின் வாழ்வேதான் என்று எண்ணத்தோன்றியது. ஒருவர்மீது ஒருவராக எட்டடிக்கு எட்டடி அறையில் வாழும் நண்பர்களின் வேலைத் தேடல், காமம் எல்லாமே முதல் வாசிப்பில் புன்னகையைத் தான் எழுப்புகின்றன. மானுட இயல்புகளையும் அவை சூழலில் பிரதிபலிக்கும் விதத்தையும் கூர்மையாக அவதானித்து பதிவு செய்திருப்பதன் மூலம் எழுப்பப்படும் புன்னகை இது மிக அடக்கிய தொனியில் அசோக

மித்திரனிலும் சற்றுத்தூக்கலான அங்கத்துடன் சுந்தரராமசாமியிலும் கதை சொல்லும் வக்கணையுடன் கி.ராஜநாராயணனிலும் இந்த அம்சம் வெளிப்படுவதனாலேயே அவர்கள் சமகாலத் தமிழின் ஆகப் பெரிய படைப்பாளிகளாக கருதப்படுகிறார்கள்........

"இப்படைப்புக்களில் தெரிவது நானே தான் முகமறியா ஊரின் விமான நிலையத்தில் வழிதவறிய எலி மாதிரி தவிக்கிறேன். இடுக்கின அறையில் காமத்தில் குமைகிறேன், அகதியாகிறேன். என்னை எனக்குக் காட்டும் இக்கதைகள் புதுப்புது வாசல்கள் திறக்க மீண்டும் மீண்டும் படிக்க முடியும். இது ஒரு 'புலம் பெயர்ந்தோர் இலக்கியம்' என்று அடையாளம் போடுவது எனக்கு கசப்பு தருகிறது. மேலான படைப்புக்கள் அத்தகைய கூண்டுகளிலிருந்து சிறகடித்து எழுந்து வருகின்றன என்பதற்கு இந்நாலும் ஓர் உதாரணமாகும்.

#### 4.3. *தனிமை வாழ்வு*

அழிவின் அழைப்பிதழ் தியாகலிங்கம் எழுதியுள்ள அழிவின் அழைப்பிதழ் என்ற கவனத்திற்குரிய நாவல் பின்வருமாறு ஆரம்பிக்கப்படுகின்றது.[13]

" ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன, இந்த நாட்டிற்கு வந்து என்னதான் நண்பர்களுடன் சேர்ந்து இருந்தாலும் தனிமையில் இருப்பது போன்ற உணர்ச்சி தான் எப்பொழுதும் மனதில்!. நாட்டிலே அப்பா அம்மாவுடன் இருக்கும்போது இப்படி தனிமை உணர்ச்சி தோன்றியது இல்லை. ஆண்களுடன் ஆண்கள் அன்னியோன்னிய மாக இருப்பது நடிப்பது போல....... உடம்பைத் தொட்டுக் கொள்ளாத உறவு இது, இதில் எப்படிப் பட்ட அன்னியோன்னியம் இருக்க முடியும்.......

எத்தனை ஆண்களுடன் சேர்ந்திருந் தாலும், தனிமையில் இருப்பது போன்றதோர் உணர்ச்சியே எப்போதும். சிலருக்கு இப்படி வாழ்வதில் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் என்னால் இதைத் தாங்க முடியவில்லை. எனக்கு இப்படி வாழ்வது நரக வேதனையாக இருந்தது. இப்படி வாழ்வதை விட தற்கொலை செய்துவிடலாம் போலத் தோன்றும்...... மனதில் அந்த ஆசை வந்தபின்பு எந்தச் சமாதானத்தையும் மனம் கேட்பதில்லை. ஊரில் இருந்தால் இப்படி பூதாகரமான பிரச்சினையாக இது இருந்திருக்காது. இங்கு தனிமை ஒரு பக்கம். வெள்ளையர் அனுபவிப்பதைப் பார்த்தால் ஏற்படும் ஏக்கம் இன்னொரு புறம் இரண்டும் சேரும்போது மனசின் வேதனை ஆயிரம் மடங்குகளாகி விடுகிறது. அப்பா, அம்மா அந்த வேதனையைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை..... நான் சாதாரண மனிதன் என்னைப் பருவம் பந்தாடுவதை உணருகிறேன். பலருக்கு உண்மையைச் சொல்லத் துணிவில்லை..... நான் உண்மையைச் சொல்கிறேன். நான் வெக்கப்படவில்லை. வெக்கப்படவேண்டிய விஷயமல்ல. இந்தப் பெண்களைப் பார்த்தால் மனசு பேதலிக்கிறது. காதல் வருகின்றதோ இல்லையோ அவளோடு கலவி செய்ய வேண்டும் போல ஓர் உணர்ச்சி.....

பந்தி நீண்டதாயினும் புகலிடநாட்டுத் தமிழ் இளைஞர்கள் எதிர் நோக்கும் ஒரு முக்கிய பிரச்சினை பற்றியும் அதற்கான காரணம் பற்றியும் அதனால் தமிழ் இளைஞர் வாழ்வில் – ரமணராகவன் – ஏற்படும் பாரதூரமான பதிப்புப் பற்றியும் (எயிட்ஸ் நோய்க்குள்ளாதல்) இந்நாவல் மனத்தை உருக்கும் வண்ணம்சித்திரிக்கின்றது; முக்கிய பாத்திரங்களின் மன உணர்வுகள் நுணுக்கமாகவும் தத்ரூபமாகவும் வெளிப்படுத்தப் படுகின்றன. பலரும் எழுதத் தயங்கும் பிரச்சினையொன்றை அலச முற்படுவது மட்டுமன்றி, இலங்கைத் தமிழ்ச் சமூகத்தை

குறிப்பாக யாழ்ப்பாணச் சமூகத்தையும் அதன் இறுக்கமான பண்பாட்டுப் பேணுகையையும் கேள்விக்குட்படுத்துவதனாலும் இந்நாவலின் வரவு முக்கியம் பெறுகின்றது.

### 4.4. இனவெறி நாளை

மேற்குறிப்பிட்ட நாவலாசிரியர் எழுதிய பிறிதொரு நாவல் இதுவாகும் பதிப்பாசிரியர் கூறுவது போல[14]. "இந்த நாவல் கையாளும் கதை தமிழுக்குப் புதிது......புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் விடுமுறைகளிலே வரும் நம்மவர்கள் உண்மைகளைப் பேசத் தயங்குகின்றார்கள். மேற்குலகின் வளமான வாழ்க்கையைப் பெற்று விட்டதான கனவு களைக் கலைக்க விரும்பாத நாகரிகத்தைப் பயிலுகின்றார்கள். புகலிட நாடுகளில் உருவாகி வரும் புதிய நெருக்கடிகள் பற்றி மனம் திறந்து பேசுவதைத் தவிர்க்கின்றார்கள். அவர்கள் அனுபவிக்கும் இன்னல்களும், இழப்புகளும் ஆழமானவை." இத்தகைய சிக்கலான புதிய பிரச்சினைகளுள் ஒன்றுதான் ஐரோப்பிய நாடுகளிலே உருவாகியுள்ள நவநாஜிகள் இயக்கம். இந் "நவநாஜிகள் வெள்ளைத்தோல் பெருமிதர்கள் தமிழர்களை வெறுக்கின்றார்கள். கறுப்புப் பன்றிகள் என்று தூற்றுகின்றார்கள்."[15]

மேற்குறித்த நவநாஜிகள் இயக்கத்திற்கு நோர்வேயில் வாழ்கின்ற தேவ குருவின் குடும்பம் இலக்காகின்றது காந்தியவாதியான தேவகுரு அகிம்சையில் உறுதிகொண்டு, அந்த நவநாஜிகளை அன்பினால் திருத்த முயல்கிறார். அவருடைய மனைவியின் மீதான துன்புறுத்தல்களில் தொடங்கி அவருடைய மகள் உயிரோடு எரிக்குக் கொல்லப்படும் வரை வன்முறை வளர்கின்றது இறுதி மட்டும் அகிம்சை நெறியில் நிற்கும் தேவகுரு, அந்த நொஸ்க் (நார்வே மொழி) இனவெறியர்களுக்கு, தன் அகிம்சை நெறியின் உறுதியை விளக்கி, தன்பக்கத்து நியாயத்தை உணர்த்துவதோடு நாவல் நிறைவு பெறுகின்றது.

"இது புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களின் கதை. இன்றளவும் தகவல் ஊடகங்களால் இருட்டடிப்புச் செய்யப்படும், தமிழ் மக்களின் அறியப்படாத துயரம்"16 என்று இன்குலாப் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பினும் நாவல் எடுத்தாண்ட பிரச்சினை புகலிட நாடுகளிலே வாழ்கின்ற மூன்றாம் உலக நாட்டினர் அனைவருக்கும் உரியதே. இவ்விதத்தில் இவ் இலங்கைப் புகலிட நாவலூடாக, தமிழ்நாவல் தனது எல்லைகளை அகட்டி, மூன்றாம் உலக நாடுகளின் நாவல் போக்குகளுடன் சங்கமித்துக் கொண்டிருக்கின்ற தென்பதில் தவறில்லை.

### 4.5. இலண்டன் வாழ் தமிழர்

புகலிட நாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் பற்றிய நாவல்களுள் இலண்டன் வாழ் தமிழர்கள் பற்றிய நாவல்களே அதிகம் வெளிவந்துள்ளன. அனைத்தும் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தினால் எழுதப்பட்டுள்ளன.

இவரது நாவல்களுக்கென பொதுவான சில இயல்புகளுள்ளன. இவற்றுள், (i) இலங்கையிலும் புகலிடத்திலும் வாழ்கின்ற தமிழ்ச் சமூகம், அதன் பண்பாடு, அதன் அரசியல் என்பன விமர்சனத்திற் குட்படுகின்றமை. (ii) இவற்றிற்கேற்றவாறு பாத்திரங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றமை என்பன குறிப்பிடத்தக்கன. இலங்கையிலோ புகலிட நாடுகளிலோ எழுந்த வேறெந்தத் தமிழ் நாவல்களிலும் இப்பண்புகள் இடம்பெறுவது அரிதாகும்.

இவரெழுதிய "ஒரு கோடை விடு முறை" இலண்டனில் வாழ்கின்ற தமிழ் இளைஞர்களின்

அரசியல் ஈடுபாட்டை ஓரளவு வெளிப்படுத்த முற்படுகின்றது. தமிழர் சிங்களவர் ஒற்றுமையைப் பேசும் முற்போக்கு வாதிகளும் (எ.–டு சத்தியன்), தமிழீழ விடுதலையில் நாட்டம் கொண்டு செயற்படுவோரும் (எ –டு சபேசன்) இதில் இடம் பெறுகின்றார்கள்.

" உலகெல்லாம் வியாபாரிகள் 1970 – 1980 காலப்பகுதியில் இலண்டனில் வாழ்ந்த தமிழரது அரசியலுணர்வுகளை வெளிப்படுத்து கின்றது. பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்ட தமிழ்த்தலைவர்களை ஆதரிப்பவராக பேரின்ப நாயகமும் ஆயுதப் போராட்டத்தை ஆதரிப்பவனாக கார்த்திகேசனும் இடம்பெறு கின்றார்கள். இலண்டன் வாசியான அன்ரனியைக் காதலிப்பவளாக பேரின்பநாயகத்தின் ஒரு மகளான மீனாவும் தந்தைக்கடங்கி தனது காதலைத் துறந்து பணக்காரனாகிய சிவநேசவை மணந்து அவனது கொடுமைகள் தாங்காமல் அவனைக் கைவிட்டு தனது காதலனான கார்த்திகேயனை அடையும் தீர்மானமுடையவளாக பேரின்பத்தாரின் மற்றொரு மகளான சகுந்தலாவும் இடம் பெறுகின்றார்கள்.

இந்நாவலாசிரியரின் சமூகப் பார்வை யின் அடிப்படை எத்தகையதென்பதனை வெளிப்படுத்துவதாக நாவலுக்கான தலைப்பு (உலகெல்லாம் வியாபாரிகள்) அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆங்காங்கு இடம்பெறும் உரையாடல்கள் அதனை தெளிவாக்குகின்றன. எ – டு:

"கல்யாணம் என்பது என்னைப் பொறுத்தவரையில் இரண்டு மனிதப்பிறப்பு களுக்கிடையில் நடக்கும் ஒரு நிகழ்ச்சி. அது சமயச் சார்பிலோ அல்லது வேறு எந்தப் பொருளாதார முறையிலோ அமைவது வெறும் வியாபாரம். உன் தந்தை போன்றவர்களுக்கு வாழ்க்கையில் எல்லாமே வியாபாரம் தனிப்பட்ட வாழ்க்கையிலோ அரசியலைப் பொறுத்த வரையிலோ எதிலும் லாப, நட்டத்தின் அடிப்படையிலே தான் அவர்களால் யோசிக்கமுடியும்" [17].

– கார்த்திகேயன்

"காசுக்காக எதையும் வாங்க எத்தனையோ தமிழர்கள் காத்திருக்கினம் எங்கட தமிழர்களைப் பொறுத்தவரையில் பெண்கள் வெறும் கத்தரிக்காய்கள் தானே. வாங்கலாம் விற்கலாம்" [18]

– சகுந்தலா

"சில பெண்களுக்கு தங்களை தாங்களே வருத்திக் கொள்வதில் ஒரு திருப்தி. தன் ஆத்மீக உணர்ச்சிகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு மற்றவர்கள் கண்களுக்கு நல்ல பிள்ளைப் பட்டத்துக்கு நடிப்பும் ஒரு வியாபாரம் தான் முதலாளியும் ஏகாதிபத்தியவாதியும் தங்கள் சுய தேவைக்கு மற்றவர்களின் உழைப்பையும் உரிமையையும் விலைக்கு வாங்குகிறார்கள். உன்போன்ற பெண்கள் ஊருக்கு வேடம்போட தியாகம், பெண்மை, கற்பு குடும்பம் என்ற கௌரவமான சொற்களுக்காகத் தங்களையே விற்றுக் கொள்கிறார்கள். தங்கள் தன்மானத்தை சுய உணர்வை விற்றுக் கொள்கிறார்கள்." [19]

– கார்த்திகேயன்

தேம்ஸ் நதிக்கரையில் , 1972 – 74 கற்கும் நோக்குடன் இலண்டனுக்கு வந்து வாழ்ந்த தமிழ் இளைஞர்களின் மன ஓட்டங்கள் வாழ்க்கையைப் பார்க்கும் விதம் என்பவற்றை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக அக்காலப் பகுதியில் வந்த பெரும்பாலான இளைஞர்களின் 'காதல்கள்' வெளிநாட்டுப் பெண்களின் உறவில் தங்கியிருந்தமை (எ–டு : செந்தில், மெரா)

பற்றியும், பின்னர் அவ்விளைஞர்கள் கல்வி முடிந்ததும் இலங்கைக்குத் திரும்பி திருமணச் சந்தையில் தம்மை விற்பது பற்றியும் (எ –டு : செந்தில், யாழ்ப்பாணப் பெண்ஒருத்தி) இந்நாவலில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

'பனிபெய்யும் இரவுகள்'. அடிப் படையில் காதற்கதை எனினும் வித்தியாசமான காதற்கதை, பருவகால அடிப்படையில் தோன்றும் காதல் (ராதிகா – தியாகு), காதலுக்காகத் தன்னை அர்ப்பணிப்பது (தியாகு சாராதா) பரஸ்பரம் உணர்ந்து கொண்டவரின் இன்டெலெக்சுவல் காதல் (இராமநாதன் சாரதா) என மூன்றாகக் காதலை பிரித்துப் பார்க்கும் கோட்பாட்டை நாவலாசிரியர் கதை மாந்தர் மூவரின் தனிப்பட்ட காதலுணர்வுகள் மூலம் நாவலில் காட்ட முனைந்துள்ளார்.

மேலும், குழந்தைக்காக ஏங்கும் சாரதாவிற்கு ' ரெஸ்ற் ரியூப் பேபி'க்கு வழிகாட்டுவதும் அதற்காக கணவன் இராமநாதன் கையாளும் தந்திரோபாயமும் பாரம்பரியத் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் அதிர்ச்சி தரக்கூடியன.

பெண்கள் மட்டும் தியாகம் செய்ய வேண்டும் என்ற ஆணாதிக்கக் கருத்தியலுக்கு மாறாக ஆண்களாலும் முற்போக்காக வாழ்ந்து தியாகம் செய்ய முடியுமென்று (இராமநாதன் ஊடாக) காட்ட முனைவதும் அத்தகையதே.

'வசந்தம் வந்துபோய்விட்டது' என்ற பிறிதொரு நாவல் மாறிவரும் பண்பாட்டுச் சூழலுக்கு புகலிடத் தமிழ்ப் பெண்கள் எவ்வாறு முகங்கொடுக்க முற்படுகிறார்கள் என்பதனை அதிர்ச்சிகளுடன் வெளிப்படுத்துகின்றது.

'அவனும் சில வருடங்களும்' என்ற இன்னொரு நாவல் மேற்கூறிய நாவல்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டு, திரைப்படக் கல்லூரியில் பயில்கின்ற சிலரது அனுபவங்களைப் பற்றி பேசுகின்றது.

### *4.6 மேற்கு ஐரோப்பியரது வாழ்க்கை*

புகலிட நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்கள் பற்றிய நாவல்களிலே மேற்கு ஐரோப்பியரது வாழ்க்கை பற்றியும் பேசப்படுவது இயல்பானதே. இஃது , குறிப்பிட்ட சில நாவல்களின் முக்கிய கூறாகவிருக்கின்றது. சில நாவல்களில் பலவிடயங்களுள் ஒன்றாக விருக்கின்றது. இவ்விதத்தில் முதல் வகை நாவல்கள் பற்றிக் கவனிப்போம்.

முன்னர் குறிப்பிட்டதுபோல, சுயம்வரம் நாவலின் ஒரு பகுதி, டென்மார்க்கில் டேனிஷ் குடும்பமொன்றின் வீட்டிலே தங்கியிருக்கின்றான். வீட்டின் சொந்தக்காரர் இயரிக் ஜென்சன்; மகள் சோபியா இவர்கள் வாழ்க்கை அமைதியை விரும்பும் டேனிஷ் குடும்பத்தினர் பலரது வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றது. ஜீவாவை விரும்புகின்ற சோபியா ஊடாக, டேனிஷ் பெண்களது நற்பண்புகள் தத்ரூபமாக வெளிப்படுத்தப்படுகின்றன.

'அழிவின் அழைப்பிதழில்' இடம்பெறும் நோர்வேஜியர்களுள் கெய்தி என்ற பெண் முக்கியமானவள். அவள் உடல் விற்பவளாயினும், அவளிடமும் நற்பண்புகளிருப்பது எடுத்துக் காட்டப்படுகின்றது.

இலண்டன் வாழ்தமிழர்களது வாழ்வைப் பற்றிச் சித்திரிக்கின்ற ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் நாவல்கள் அனைத்திலும் இலண்டன் வாழ் ஆங்கிலேயர்கள் முக்கிய இடம்பெறுகின்றார்கள். இவற்றுள் 'தேம்ஸ் நதிக்கரையில்' முக்கியமானது. இதில் வருகின்ற

அபலைப்பெண் மைரா செந்திலை விரும்புகின்றாள். நம்புகின்றாள். வயிற்றில் கருவைச் சுமக்கின்றாள். இறுதியாக செந்திலால் ஏமாற்றப்படுகின்றாள். இத்தகைய மைரா சிறந்த குணசித்திர பாத்திரமாக சிருஷ்டிக்கப்பட்டுள்ளாள்.

## 5. முடிவுரை

இலங்கைப் புகலிட நாவல்களாக 1983 தொடக்கம் இன்றுவரை வெளியானவற்றுள் 22 நாவல்கள் இங்கு கவனத்திற்குட்படுத்தப் பட்டுள்ளன. தவிர, வெளிவந்த வேறுசில நாவல்கள் பற்றிய தகவல்கள் இருப்பினும்.[20] இவ் ஆய்வின்போது அவற்றைப் பெற முடியவில்லை. தொடர்ந்து கதையாக வந்து முற்றுப்பெறா சில நாவல்களுமுள்ளன.[21] எவ்வாறாயினும், புகலிட நாவல்களாக இன்றுவரை ஏறத்தாழ 30 நூல்களே வெளிவந்திருக்கலாமென்று ஊகிக்கலாம்.

ஆய்விற்குக் கிடைத்த 22 நாவல்களுள் இலங்கைவாழ் தமிழர்கள் பற்றியவையாக 09 நாவல்களுள்ளன. புகலிட நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களைப் பற்றியனவாக 04 நாவல்க ளுள்ளன. ஏனையவை, புகலிட நாடுகளையும் இலங்கையையும் களமாகக் கொண்டுள்ளன.

மேற்கூறிய நாவல்கள் இலங்கை நாவல் வளர்ச்சியில் பெறுகின்ற முக்கியத்துவம் தொடர்பாக பின்வருவனவற்றைக் குறிப் பிடலாம்.

1. இலங்கையின் அரசியற் சூழலில் இலங்கையில் வெளிவந்திருக்க முடியாத பேரினவாத ஒடுக்குமுறையும் அதன் வெவ்வேறு மட்டத்திலான விளைவுகளும் பற்றிய நாவல்களின் வரவு இலங்கை நாவல் வளர்ச்சிக்கு வலுவும் வளமும் அளிக்கின்றது.
2. புகலிட நாட்டு வாழ்க்கை காரணமாக புதிய அனுபவங்கள், புதிய களங்கள், புதிய பிரச்சினைகள் என்பவற்றால் இலங்கை நாவல்களின் பரப்பு அகன்றுள்ளது. (அழகாகக் கூறுவதாயின் 'தில்லையாற்றங் கரை தொடக்கம் தேம்ஸ் நதிக்கரை வரை அது வியாபித்துள்ளது'.)
3. இலங்கைத் தமிழ்ச் சமூகம், அரசியல் பாரம்பரியப் பண்பாடு என்பன இவற்றின் வரவால் ஆழமான விமர்சனத்திற்குட் பட்டுள்ளது.
4. இலங்கையின் நீண்டகால நாவல் வரலாற்றிலேகூட ஒருங்கே அத்தன்மைகள் கொண்ட நாவல்களாக உள்ளடக்கமும் கலைத்துவமும் இலங்கை நாவல்கள் அருகிய சூழலில், 'அழிவின் அழைப்பிதழ்', 'கொரில்லா', 'ஒரு பூ', 'வானம் வசப்படும்', 'ஒரு அகதி உருவாகும் நேரம்', 'சுயம்வரம்' ஆகிய நாவல்கள் குறுகிய காலப்பகுதியில் வெளிவந்துள்ளமை இலங்கை நாவல் வளர்ச்சியை ஓர் ஆரோக்கியமான நம்பிக்கையுடனான – திசை நோக்கித் திருப்பியுள்ளன.
5. அழிவின் அழைப்பிதழ்', 'வானம் வசப்படும்' புகலிட நாவல்கள் கையாளும் விடயங்கள் தமிழருக்கு மட்டுமன்றி புலம்பெயர்ந்து வாழ்கின்ற மூன்றாம் உலக நாட்டினர் அனைவருக்கும் பொருந்துகின்றன. .. இவ்வழி, இந்நாவல்களூடாக, ஒட்டுமொத்த மான தமிழ் நாவல் வளர்ச்சி மூன்றாம் உலக நாட்டு நாவல் வளர்ச்சியோடு ஒன்றித்துப் போகின்றமை தமிழ்நாவல் வளர்ச்சிப் போக்கிலேற்பட்ட பாய்ச்சல் என்னும் படியாகவுள்ளன.
6. இறுதியாக இலங்கையில் தமிழ் நாவல் வளர்ச்சி எய்தவில்லை என்று கருதுகின்ற தமிழ் நாட்டு விமர்சகர் சிலரது அபிப்பிராயத்தை உடைக்கின்ற சில நாவல்கள் (பொ.கருணாகரமூர்த்தியின் படைப்புகள்) வெளிவந்துள்ளமையும் அழுத்தியுணரப்பட வேண்டியதாகின்றது.

## அடிக்குறிப்புக்கள்

1. பார்த்திபன்; ஆண்கள் விற்பனைக்கு, வெளியீடு : தென்னாசிய நிறுவனம், மார்கழி 1988, ப.5.
2. பார்த்திபன்; பாதிஉறவு, வெளியீடு : தென்னாசிய நிறுவனம்
3. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்; 'தில்லையாற்றங்கரை', மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1998, ப.4.
4. விமல் குழந்தைவேல்; பேட்டி, வீரகேசரி, 10.08.2003.
5. துரை.கே.எஸ்; ஒரு பூ; டென்மார்க், பக் 159–162.
6. மே.கு.நூ, பக் 165–167
7. துரை.கே.எஸ்; சுயம்வரம், டென்மார்க், 1993.
8. மே.கு.நூ. பக். 54–55
9. செழியன்; ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து, கனேடியன் நியூ புக் பப்ளிக்கேசன், ரொறொன்ரோ, கனடா, 1998.
10. மே.கு.நூ. பக். 174
11. யுவன் சந்திரசேகர்; எனக்குப் பிடித்த புத்தகம், கொரில்லா, காலச்சுவடு, மார் – ஏப் 2003, பக் 58–59.
12. ஜெயமோகன்; 'இவை என் முகங்கள்', ஒரு அகதி உருவாகும் நேரம், பொ.கருணாகரமூர்த்தி, ஸ்நேகா, 1998.
13. தியாகலிங்கம்.இ; அழிவின் அழைப்பிதழ், மித்ர வெளியீடு, சென்னை, ப.1
14. தியாகலிங்கம்.இ; நாளை, மித்ர வெளியீடு, சென்னை, 1999, ப.5
15. மே.கு.நூ. பக் 5
16. மே.கு.நூ. பக் 7
17. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்; உலகெல்லாம் வியாபாரிகள், நீலமலர், 1992, பக். 66.
18. மே.கு.நூ. பக். 98
19. மே.கு.நூ. பக். 197
20. நிஜங்கள், ஜனனம் ஆகிய இருபடைப்புகள் பார்த்தீபனால் எழுதப்பட்டுள்ளன. ஆதாரம் 'பாதி உறவு' நாவலின் அட்டைக்குறிப்பு.
21. 'தூண்டில்' (1988) சஞ்சிகையில் 'கனவை மிதித்தவன்' என்ற நாவல் பிரசுரமாகி யுள்ளது. பார்த்திபன் எழுதிய இந்நாவல் அகதிமுகாம் வாழ்வு பற்றியது. சுவடுகள் (1994) சஞ்சிகையில் ஆதவன் எழுதிய 'மண்மனம்' போராட்ட சூழலில் அப்பாவி இளைஞனொருவன் பற்றியது.


மூல நூல்கள் – (புகலிட நாவல்கள்)

1. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், ஒரு கோடை விடுமுறை, அலை வெளியீடு, 1981.
2. பார்த்திபன், வித்தியாசப்படும் வித்தி யாசங்கள், தென்னாசிய நிறுவனம், 1986
3. ..............., பாதி உறவு, தென்னாசிய நிறுவனம், ஜுலை, 1987.
4. ..............., ஆண்கள் விற்பனைக்கு, தென்னாசிய நிறுவனம், மார்கழி, 1988.
5. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்; உலகெல்லாம் வியாபாரிகள், நீலமலர், ஏப்பிரல், 1991.

6. ............., தேம்ஸ் நதிக்கரையில், பாரி நிலையம், ஆகஸ்ட், 1992.
7. துரை.கே.எஸ்; சுயம்வரம், டென்மார்க், பெப்.1993
8. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்; பனிபெய்யும் இரவுகள், பாரிநிலையம், சென்னை, செப். 1993
9. துரை.கே.எஸ் ஒரு பூ, டென்மார்க் ஆகஸ்ட் 1995
10. கருணாகரமூர்த்தி.பொ; அகதி உருவாகும் நேரம் (வானம் வசப்படும், மாற்றம். என்பனவும் உள்ளடங்கியுள்ளன.), ஸ்நேகா, ஏப்ரல் 1996
11. தியாகலிங்கம் இ; அழிவின் அழைப்பிதழ், மித்ர வெளியீடு, சென்னை, 1997.
13. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்; வசந்தம் வந்து போய்விட்டது. குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 1997.
14. .........., தில்லையாற்றங்கரையில் மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1998.
15. செழியன்; ஒரு மனிதனின் நாட் குறிப்பிலிருந்து, கனேடியன் நியூ புக் பப்ளிகேசன், ரொறன்ரோ, கனடா ஜூன் 1998
16. கடற்புத்திரன், வேலிகள் ('வெகுண்ட உள்ளங்கள்' படைப்பும் இணைந்துள்ளது.), குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை 1998.
17. தியாகலிங்கம். இ, நாளை மித்ர வெளியீடு, சென்னை, ஏப்ரல் 1999, மண்ணும் மல்லிகையும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை 1999.
18. விமல் குழந்தைவேல், மண்ணும் மல்லிகையும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை 1999.
19. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், அவனும் சில வருடங்களும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 2000.
20. ஷோபாசக்தி, கொரில்லா, அடையாளம், திருச்சி, நவம். 2001.